1972 ஆகஸ்ட் 23]

குப்பம், போளூர் சர்க்கரை ஆலைச் சக்கைகளையும் இங்கே கொண்டு வந்து தொழிற்துறையில் பின்னடைந்துள்ள தஞ்சையில் கூட்டுறவுத் துறையில் ஒரு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டில் சுமார் 9 லட்சம் டன் 'பகஸ்' இருக்கிறது. பெரும்பாலும் இவற்றை ஆலையில் ஃப்யூவலுக்குப் பயன்படுத்துகிறார்கள். ப்யூவலுக்கு ஆல்டர் நேடிவ் கண்டுபிடித்தாலொழிய காகிதத் தொழிற்சாலைக்கு இதைப் பயன் படுத்துவது கஷ்டமாக இருக்கும்.

THIRU B. VENKATASWAMY : We are importing paper from other Nations. May I request the Hon. Minister whether there is any concrete proposal so as to use bagasse from all the sugar factories in the State to manufacture paper in our State itself.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதுதான் பதில் சொன்னேன். இப்போது இதை ஃப்யூவலுக்குப் பயன்படுத்துகிறார்கள். அதற்கு மாற்று ஏற்பாடு செய்தால்தான் அதைக் செய்யப் பயன்படுத்த முடியும்.

*285 வினா.—திரு. பெ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காகிதக்கூழ், காகித உற்பத்தி ஆகியவைகளுக்கு வேண்டிய இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்ய சென்னைக்கு அருகாமையில் ஒரு தொழிற்சாலை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இதுபோன்ற சாதனங்கள் தற்போது எங்கிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரங்கள் என்னிடத்தில் இல்லை.